செ.வெ.எண்: 27 நாள்:20.08.2020

## கோயம்புத்தூர் மாவட்டம்

# பொதுமக்கள் மாவட்டங்களுக்குள் பயணம் மேற்கொள்ள இ-பாஸ் முறையானது மிகவும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தகவல்.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(20.08.2020) கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகள் மற்றும் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அனைத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையர் திரு.சுமித்சரண் இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளரசு இ.கா.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஷ்ரவண்குமார் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ரமேஷ்குமார், மாநகர காவல் துணை ஆணையர் திரு.கோ.ஸ்டாலின், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்(பொ) மரு.காளிதாசு, இ.எஸ்.ஐ மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.கிருஷ்ணா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.ரமேஷ்குமார் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதுடன், தேவையான தளர்வுகளுடன் பொது முடக்கத்தை மிகவும்

கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைபிடித்தல் மற்றும் கைகளை முறையாக அடிக்கடி கழுவுதல் போன்ற வழிமுறைகளை பின்பற்ற அரசால் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் விரைவாக நடைபெற்று வருகிறது. மேலும், அதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, தினந்தோறும் சுமார் 5,000-க்கும் மேற்பட்ட நபர்கள் வரை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 5,686 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மருத்து முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும், தொற்று கண்டறியப்படும் மாநகர மற்றும் ஊரகப்பகுதிகளில் தொடர்ந்து மருத்துவமுகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் அந்தந்தப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதுடன், தேவையற்ற அச்சம் தவிர்க்கப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுவரை 1,72,321 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பாரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், (19.08.2020) அன்று வரை 10,158 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று 7,811 நபர்கள் தற்போது வரை பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். பல்வேறு நோய் தொடர்பிலிருந்த 217நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். **தற்போது 2,130 நபர்கள் சிகிச்சையில் உள்ளனர்.**

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக தேவைகளின் அடிப்படையில் அரசு மருத்துவமனைகளில் 1,748 படுக்கை வசதிகளும், தனியார் மருத்துவமனைகளில் 1,950 படுக்கை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன். அறிகுறியின்றி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களை அந்தந்த பகுதிகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்க ஏதுவாக கொடிசியா, பெரியநாயக்கன்பாளையம் கே.டி.வி.ஆர். பொறியியல் கல்லூரி, பொள்ளாச்சி பி.ஏ. கல்லூரி, மேட்டுப்பாளையம் நஞ்சை லிங்கம்மாள் திருமண மண்டபம், பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் சிறப்பு ஏற்பாடாக 1,920 கூடுதல் படுக்கை வசதிகள் **என மொத்தம் 5,618 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிற்குள்ளானவர்களை கொரோனா தொற்றிலிருந்து மீட்டெடுக்கும் சிறப்பு முயற்சியாக, **சித்த மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, கொடிசியா அரங்கத்தில் அமைக்கப்பட்ட சித்தா முறை சிகிச்சை மையத்தில் 317 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதில் தற்போது 234 நபர்கள் பூரணகுணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 83நபர்கள் தொடர் சிகிச்சையில் உள்ளனர்.**

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சத்து மாத்திரைகள் அடங்கிய தொகுப்பினை, 10 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கும் பணியானது,** அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாக தொகுதியிலுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், பொது மக்கள் அவசியமின்றி வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியில் செல்லும் போது கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை முறையாக கடைப் பிடிக்க வேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டம் இந்தியாவின் முக்கியமான தொழில்நகரமாகவும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மையமாகவும் திகழ்ந்து வருகின்றது. கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் வாழ்வாதார மேம்பாட்டிற்கு நகர்ப்புற பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளில், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி நிர்வாகத்தினரால் அடையாள அட்டை வைத்துள்ள சாலையோர வியாபாரிகளுக்கு வங்கி கடனாக ரூ10ஆயிரம் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் அடையாள அட்டை வைத்துள்ள 5,580 சாலையோர வியாபாரிகளுக்கு வங்கி கடனுதவி வழங்கப்படவுள்ளது.

**தற்போது மாவட்டங்களுக்குள் பயணம் மேற்கொள்ள வழங்கப்படும் E-Pass முறையானது மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பணி நிமித்தமும், தொழில்புரிபவர்களும் எளிதாக சென்று வரும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதுபோன்றதொரு பேரிடர் காலங்களில் தமிழ்நாடு அரசு முழு கவனமுடன் செயல்பட்டு வருவதுடன், வளர்ச்சித்திட்டப்பணிகளை முழுகவனமுடன் எவ்வகையிலும் பாதிக்கப்படாதவாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.**

தமிழ்நாடு அரசின் திட்டங்களைப் பெறுவதில் கோயம்புத்தூர் மாவட்டம் முன்னனியில் உள்ளது. தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் உயர்மட்டப்பாலங்கள், சாலை மேம்பாட்டுப்பணிகள், குடிநீர் திட்டப்பணிகள், நீர்வழித்தடங்கள் புணரமைப்பு, பூங்காக்கள் என அனைத்து துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் அனைத்தையும் குறித்த காலத்திற்கு முன்னதாக முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தற்போதைய ஆட்சிக்காலத்தில் தான் கோயம்புத்தூர் மாவட்டத்தின் தோற்றத்தினை நவீனப்படுத்தியதுடன், பழமையான நொய்யால் ஆறு, குறிச்சிக்குளம் மற்றும் வாய்க்கால்கள் மீட்டெடுப்பு போன்ற காலம் கடந்து பேசும் திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தியாவிலேயே, மக்கள் நலன் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியமைக்கும், ஸ்மார்ட்சிட்டி திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்கும் சுமார் 116 தேசிய விருதுகளை தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. அதுபோலவே, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. இவையனைத்தும் மாண்புமிகு அம்மாவின் அரசிற்கு சான்று பகிர்கின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் பெருந்தொற்றிலிருந்து காக்க சிறப்பான போர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு சற்றும் குறையாத வகையில் பொதுமக்களுக்கான இயல்பு வாழ்க்கையை பாதிக்கப்படாத வகையிலும், தொழில் துறையினரின் துயர் துடைக்கும் வகையிலும் பல்வேறு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்ப அலுவலகம், கோயம்புத்தூர்.**